DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No. 22 /2022
Prosecution PW- 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | கார்த்திகா |
| Father's Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 11.03.2024

எதிரி ஆஜ**ரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது உப்பிடமங்கலத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். வழக்கு எதிரியான மணிகண்டன் என்பவர் எனது கணவர் ஆவார். 2009 ம் வருடம் பிரகாஷ் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டேன். எங்களுக்கு 10

Sd/-R.Sujatha,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

வயதுள்ள முகேஷ் என்ற ஆண் குழந்தை உள்ளது. எனக்கும் , எனது கணவருக்கும் கருத்துவேறுபாடு காரணமாக 2020 ம் ஆண்டு விவாகரத்து பெற்று தனித்தனியே வாழ்ந்து வந்தோம். எனது மகனை எனது கணவர் அழைத்து சென்றுவிட்டார். கடந்த 24.03.2021 ம்தேதி எனக்கும், இவ்வழக்கின் எதிரி மணிகண்டன் என்பவருக்கும் பெரியோர்கள் முன்னிலையில் பாலமலை முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. எனது கணவரும் ஏற்கனவே திருமணம் முடிந்து விவாகரத்து பெற்றிருந்தார். எங்கள் இருவருக்கும் 2 ம் திருமணம் ஆகும். திருமணம் முடிந்து எனது கணவர் எவ்வித குடும்ப வாழ்க்கையிலும் ஈடுபடாமல் இருந்தார். நான் அவரிடம் கேட்டபோது சிறிது நாட்கள் கழித்து சரியாகிவிடும் என்று அவர் கூறினார். சுமார் 2, 3 மாதங்கள் கழித்து எனது கணவரின் தகப்பனார் ராமசாமி என்ற மணி என்னை கைபிடித்து இழுப்பதும், இரவு நேரத்தில் துாங்கும்போது தொந்தரவு செய்வதாக இருந்து வந்தார்.

2) நான் எனது கணவரிடம் சொன்னபோது அவர் அவருடைய அப்பா என்ன சொல்கிறாரோ அதன்படி இருந்ததால்தான் வாழ முடியும் என்று கூறினார். மேற்படி சம்பவத்தை எனது மாமியார் சகுந்தலாவிடம் கூறினேன். அப்போது அவர் எனது மகனும், கணவரும் என்ன கூறுகிறார்களோ அதன்படி நடந்து கொள் என்றும் அப்போதுதான் இங்கு வாழ முடியும் என்று கூறினார். எனது மாமனார் செய்த காரியங்கள் எனக்கு அருவருப்பாக இருந்தது. 2021 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் டெஸ்ட்டியூப் மூலமாக குழநதை பெற்று கொள்வதற்காக கரூா நிர்மலா மருத்துவமனைக்கு சென்று வந்தோம். அப்போது எனக்கு கொரனா என்பதால் மேற்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளவில்லை. என்னை தீபாவளி நேரத்தில் எனது கணவர் உப்பிடமங்கலத்தில் உள்ள எனது பெற்றோர் வீ ட்டில் என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டார்.

3) எனது அப்பாவும், நானும் பலமுறை அவருக்கு அழைத்தபோதும் அவர் என்னை தவிர்த்து வந்தார். அதனால் நான் 12.03.2022 ம்தேதி மதியம் 3.10 மணிபோல் கரூர் LGP பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள ஆர்த்தி காம்பளக்ஸ் VPMA கன்ஸ்ட்ரக்ஷன் சென்றேன் . அங்கு எனது கணவர் வேலைபார்த்து வந்தார். நான் செல்லும்போது எனது கணவருடன் 5, 6 நபர்கள் இருந்தார்கள். நான் அங்கு செல்வதை பார்த்துவிட்டு எனக்கு தெரிந்து பாலுச்சாமியும், பிச்சைமுத்துவும் அங்கு வந்தார்கள். எனது கணவர் என்னை பார்த்துவிட்டு அவருடைய அப்பாவிற்கு போன் செய்து தேவிடியா கார்த்திகா வந்திருக்கிறா என்று போனில் சொன்னார். அவருடைய அப்பா அவரிடம் என்ன கூறினார்

என்று தெரியவில்லை. நாதேரி தேவிடியா என்று என்னை அங்கிருந்த ஆட்கள் முன்னால் திட்டி, வலதுபக்க இடுப்பில் எட்டி உதைத்துவிட்டார். ஆட்களுக்கு முன்னால் என்னை அசிங்கமாக பேசியது, அவமானமாகவும் இருந்தது. எனது முடியை பிடித்து இழுத்து சுவரில் தள்ளிவிட்டார். எனது துப்பட்டாவை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். என்னை தேடிவந்தால் உன்னை கொன்றுவிடுவேன் என்றும் மிரட்டினார். என்னுடன் வாழவேண்டுமே என்று நினைத்தால் உன்னை சாகடித்துவிடுவேன் என்றும் மிரட்டினார். அவர் ஆட்கள் முன்னால் என்னை அசிங்கமாக பேசி, அடித்ததில் எனக்கு அசிங்கமாகவும், அவமானமாகவும் இருந்தது.

4) அவர் அடித்ததால் எனக்கு தலையிலும், வலது தோளிலும் வலியாக இருந்தது. என்னை அங்கு வந்த பாலுசாமியும், பிச்சைமுத்துவும் கரூர் அமராவதி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது 13.03.2022 ம்தேதி காலை 8 மணிபோல் கரூர் நகர போலிசார் வந்து என்னை விசாரண செய்தார்கள். நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியிடப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No. 22 /2022

Prosecution PW- 2

Deposition of Witness for    Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பாலுசாமி |
| Father's Name | : | ராசப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 11.03.2024

எதிரி ஆஜர**ில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான்  உப்பிமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 கார்த்திகாவை எனக்கு தெரியும். வழக்கின் எதிரி மணிகண்டனை தெரியும். 12.03.2022 ம்தேதி மதியம் 3 மணிபோல் நானும்,

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

பிச்சைமுத்துவும் LGB பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள கருடன் ஆடடோ பைனான்சிற்கு அங்கு சென்றபோது அ.சா.1 கார்த்திகா அந்த கட்டிடத்தில் உள்ளே சென்றார். நாங்கள் பார்த்துவிட்டு உள்ளே சென்றபோது எதிரி மணிகண்டன் கார்த்திகாவை பார்த்து தேவிடியா வந்துவிட்டாள் என்று சொல்லி கொண்டிருந்தார். கார்த்திகாவை பயமுறுத்துவதுபோல் காலால் கார்த்திகாவின் இடுப்பில் எட்டி உதைத்துவிட்டார். முடியை பிடித்து இழுத்து சுவற்றில் தள்ளிவிட்டார். அங்கு 5,6 நபர்கள் இருந்தார்கள். துப்பட்டாவை பிடித்து இழுத்துவிட்டார். கார்த்திகா வலி தாங்க முடியாமல் அழுதார். அவரை தேடிவந்தால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.

2) நானும், பிச்சைமுத்துவும் நாங்கள் சென்ற காரில் கார்த்திகாவை அழைத்து சென்று கரூர் அமராவதி மருத்துவமனைக்கு சிசிக்சையில் சேர்த்தோம். கார்த்திகாவை நாங்கள் என்ன என்று கேட்டபோது மணிகண்டனை 2 வது திருமணம் செய்துள்ளதாகவும், அவர் கார்த்திகாவுடன் வாழாமல் இருந்து வந்ததால் அவரிடம் கேட்பதற்காக வந்ததாகவும் கூறினார். மறுநாள் காலை கார்த்திகாவை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு சென்றபோது கார்த்திகாவும், அவருடைய அப்பா பன்னீர்செல்வமும் இருந்தார்கள். அப்போது போலிசார் அங்கு வந்து என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No. 22 /2022
Prosecution PW- 3

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பிச்சைமுத்து |
| Father's Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 11.03.2024

**எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

1) நான் உப்பிமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திகாவை எனக்கு தெரியும். வழக்கின் எதிரி மணிகண்டனை தெரியும். 12.03.2022 ம்தேதி மதியம் 3 மணிபோல் நானும், பாலுசாமியும் LGB பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள கருடன் ஆடடோ பைனான்சிற்கு அங்கு

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

சென்றபோது அ.சா.1 கார்த்திகா அந்த கட்டிடத்தில் உள்ளே சென்றார். நாங்கள் அவரை பார்த்துவிட்டு உள்ளே சென்றபோது எதிரி மணிகண்டன் கார்த்திகாவை பார்த்து நாதாரி தேவிடியா வந்துவிட்டாள் என்று சொல்லி கொண்டிருந்தார். மணிகண்டன் காலால் கார்த்திகாவின் இடுப்பில் எட்டி உதைத்துவிட்டார். கார்த்திகாவின் முடியை பிடித்து இழுத்து சுவற்றில் தள்ளிவிட்டார். துப்பட்டாவை பிடித்து இழுத்துவிட்டார். அங்கு 5,6 நபர்கள் இருந்தார்கள். அதனால் கார்த்திகா பயந்து பதட்டமாக இருந்தார். கார்த்திகாவிற்கு வலது தோள்பட்டையிலும், தலையிலும் வலி தாங்க முடியாமல் அழுதார். அப்போது மணிகண்டன் அவரை தேடிவந்தால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். நானும், பாலுசாமியும் நாங்கள் சென்ற காரில் கார்த்திகாவை அழைத்து சென்று கரூர் அமராவதி மருத்துவமனைக்கு சிசிக்சையில் சேர்த்தோம். கார்த்திகாவை நாங்கள் என்ன என்று கேட்டபோது மணிகண்டனை 2 வது திருமணம் செய்துள்ளதாகவும், அவர் கார்த்திகாவுடன் வாழாமல் இருந்து வந்ததால் அவரிடம் கேட்பதற்காக வந்ததாகவும் கூறினார். மறுநாள் காலை கார்த்திகாவை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு சென்றபோது கார்த்திகாவும், அவருடைய அப்பா பன்னீர்செல்வமும் இருந்தார்கள். அப்போது போலிசார் அங்கு வந்து என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No. 22 /2022
Prosecution PW- 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பன்னீர் செல்வம் |
| Father's Name | : | கருப்பண்ண கவுண்டர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 11.03.2024

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

1) நான் உப்பிமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திகாவை எனது மகள் ஆவார். எதிரி மணிகண்டன் எனது மகளின் கணவர் ஆவார். 2009 ம் வருடம் பிரகாஷ் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டேன். எங்களுக்கு 10 வயதுள்ள முகேஷ் என்ற ஆண் குழந்தை உள்ளது.

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

எனக்கும் , எனது கணவருக்கும் கருத்துவேறுபாடு காரணமாக 2020ம் ஆண்டு விவாகரத்து பெற்று தனித்தனியே வாழ்ந்து வந்தார். கடந்த 24.03.2021ம்தேதி எனது மகளுக்கும், இவ்வழக்கின் எதிரி மணிகண்டன் என்பவருக்கும் பெரியோர்கள் முன்னிலையில் பாலமலை முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. எனது மகளின் கணவரும் ஏற்கனவே திருமணம் முடிந்து விவாகரத்து பெற்றிருந்தார். எனது மகளுக்கும், மணிகண்டனுக்கும் 2ம் திருமணம் ஆகும். திருமணம் முடிந்து எனது மகளின் கணவர் எவ்வித குடும்ப வாழ்க்கையிலும் ஈடுபடாமல் இருந்தார். எனது மகள் அவரிடம் கேட்டபோது சிறிது நாட்கள் கழித்து சரியாகிவிடும் என்று அவர் கூறியுள்ளார். சுமார் 2, 3 மாதங்கள் கழித்து எனது மகளின் கணவரின் தகப்பனார் ராமசாமி என்ற மணி என்மகளின் கைபிடித்து இழுப்பதும், இரவு நேரத்தில் தூங்கும்போது தொந்தரவு செய்வதாக இருந்து வந்துள்ளார்.

2) எனது மகள் அவளுடைய கணவரிடம் சொன்னபோது அவர் அவருடைய அப்பா என்ன சொல்கிறாரோ அதன்படி இருந்ததால்தான் வாழ முடியும் என்று கூறியுள்ளார். மேற்படி சம்பவத்தை எனது மகளின் மாமியார் சகுந்தலாவிடம் கூறியுள்ளார். அப்போது அவர் எனது மகனும், கணவரும் என்ன சொல்கிறார்களோ அதன்படி நடந்து கொள் என்றும் அப்போதுதான் இங்கு வாழ முடியும் என்று கூறியுள்ளார். 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் டெஸ்ட்டியூப் மூலமாக குழந்தை பெற்று கொள்வதற்காக கரூர் நிர்மலா மருத்துவமனைக்கு சென்று வந்ததாகவும், அப்போது எனது மகளுக்கு கொரனா என்பதால் மேற்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளவில்லை. என்மகளை தீபாவளி நேரத்தில் எனது மகளின் கணவர் உப்பிடமங்கலத்தில் உள்ள எங்கள் வீட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார்.

3) நானும், எனது மகளும் பலமுறை அவரை அழைத்தபோதும் அவர் என் மகளை தவிர்த்து வந்தார். அதனால் என் மகள் 12.03.2022ம்தேதி மதியம் 3.10 மணிபோல் கரூர் LGP பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள ஆர்த்தி காம்பளக்ஸ் VPMA கன்ஸ்ட்ரக்ஷன் சென்றுள்ளார். அங்கு எனது மகளின் கணவர் வேலைபார்த்து வந்தார். எனது மகள்

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

செல்லும்போது மணிகண்டனுடன் 5, 6 நபர்கள் இருந்துள்ளார்கள். எனது மகள் அங்கு செல்வதை பார்த்துவிட்டு எனக்கு தெரிந்த பாலுச்சாமியும், பிச்சைமுத்துவும் அங்கு சென்றுள்ளார்கள். மணிகண்டன் என்மகளை பார்த்துவிட்டு அவருடைய அப்பாவிற்கு போன் செய்து தேவிடியா கார்த்திகா வந்திருக்கிறா என்று போனில் சொல்லியுள்ளார். நாதேரி தேவிடியா என்று என் மகளை அங்கிருந்த ஆட்கள் முன்னால் திட்டி, வலதுபக்க இடுப்பில் எட்டி உதைத்துவிட்டார். எனது மகளின் முடியை பிடித்து இழுத்து சுவரில் தள்ளிவிட்டும், எனது மகளின் துப்பட்டாவை பிடித்து இழுத்தும் கீழே தள்ளியுள்ளார். என்னை தேடிவந்தால் உன்னை கொன்றுவிடுவேன் என்றும் மிரட்டியுள்ளார்.

4) பாலுசாமி எனது மகளை கரூர் அமராவதி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று சேர்த்துவிட்டு, எனக்கு தகவல் சொன்னார். நான் மருத்துவமனை சென்று எனது மகளை பார்த்தேன்.மறுநாள் மருத்துவமனையில் என் மகளுடன் இருந்தபோது கரூர் டவுன் போலிசார் அங்கு வந்து என்மகளை விசாரித்து எழுதிகொண்டார்கள். அதில் என்மகள் கையொப்பம் செய்தார். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியிடப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No. 22 /2022

Deposition of Witness for Prosecution PW- 5
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | தண்டபாணி |
| Father's Name | : | சாமியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 11.03.2024

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

1) நான் சீத்தப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 13.03.2022 ம்தேதி காலை 9.15 மணிக்கு நானும், கருணாகரனும் கரூர் LGP பெட்ரோல் பங்கிற்கு அருகில் உள்ள ஆர்த்தி காம்ப்ளக்சிற்கு

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.**

சென்றபோது டவுன் போலிசார்அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு பேப்பரில் படம் வரைந்து ஒரு பேப்பரில் எழுதிகொண்டும் என்னிடம் சாட்சியாக கையொப்பம் வாங்கி கொண்டார்கள். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியிடப்படுகிறது.** சம்பவம் 12.03.2022 ம்தேதி கணவன் மனைவி இடையே தகராறு நடந்ததாக சொன்னார்கள். என்னுடன் பார்வை மகஜரில் கருணாகரனும் சாட்சியாக கையொப்பம் செய்தார். வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.